TAMIL NADU LEGISLATIVE
2 0 AUG 1980
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1980, பிப்ரவரி, 12

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

*ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைகுறிக்கும்.

1. தகவல் கோரல்

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி அறிவிக்கும் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளும் முன்பு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் கல்லூரி ஆசிரியர்கள் 3 பேர்கள் மரணப் படுக்கையில் இருக்கிறார்கள். உயிர் போகக்கூடிய ஆபத்தான நிலைமை இருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நானும் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே குறிப்பிட்டிருக்கிற விஷயம் என் கவனத்தில் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராஜன் ; கல்லூரி ஆசிரியர்களைப் பற்றி நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் ரகுமான்கான் அவர்களும் கோவிந்தராஜன் அவர்களும் கொண்டு வந்திருக்கிற பிரச்சினை என் கவனத்தில் இருக்கின்றது. பேரவை முன்னவர் ஏதேனும் சொல்ல இருந்தால் சொல்லலாம். பதில் சொல்கிறேன்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, யார் யார் இந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே' ஆசிரியர் கிளர்ச்சி பற்றி அல்லது கோரிக்கைகளை பற்றி இந்த அரசு தனது கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் உட்பட பலரும் கேட்டிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : எழுப்பியது நான்தான் மாண்புமிகு முன்னவர் அவர் பெயரைச் சொல்லுகிறார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நான் எல்லோரையும் சொன்னேன். திரு. ரகுமான்கான் கேட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது குறித்து ஒரு அறிக்கை இந்த அவையில் தாக்கல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எம்.ஏ, லத்தீப் : யார் யார் கொடுத்திருக்கிறார்கள் என்பதை பேரவைத் தலைவர் படிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இந்தப் பிரச்சினையை இன்று எடுத்துக் கொண்டு இருந்தால் எழுப்பிய உறுப்பினர் பெயர் விடப்பட்டு இருந்தால், அப்போது அந்த உறுப்பினர் ஏன் என் பெயர் விடப்பட்டு இருக்கிறது என்று கேட்டால் நான் பதில் சொல்லி இருக்க முடியும். ஆனால் அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்று திருவாளர்கள் ரகுமான்கான், கோவிந்தராஜன், அழகர்சாமி போன்றவர்களும் மற்றவர்களும் எழுப்பி அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று நானும் விரும்புவதால்தான் பேரவை முன்னவரை அரசின் கருத்து என்ன என்று கேட்டேன். எடுத்துக் கொள்கிறபோது பெயர்களைப் படிப்பேன். அரசு தரப்பிலே இருந்து அறிக்கை வைப்பதாகச்சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை இத்தோடு விடுங்கள்.